# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

**අංක 12,278 — 1961 ජනවාරි 31 වැනි අඟහරුවාද — 31.1.1961**

**12,278 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு சனவரி மாதம் 31 ந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) இராச சபைச் சட்டம், 1946**

**18 (2) ம் பிரிவின்படி அறிவித்தல்**

**86 ம் இலக்கத் தேர்தற் தொகுதி—வவுனியா**

1956 ம் ஆண்டின் 16 ம் இலக்கம் கொண்ட இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டத்தின் 18 (2) ம் பிரிவின்படி—

(1) வாக்காளர் இடாப்பில், இறந்த அல்லது வாக்காளர்களாக இருக்கத் தகுதியற்றவர்களெனக் காணப்பட்ட, ஆட்களின் பெயர்கள் அடங்கிய " ஏ " என்னும் நாமாவலியும் ;

(2) இதுவரை தயாரிக்கப்பட்ட வாக்காளர்கள் இடாப்பில் தமது பெயர் காணப்படாதவர்கள், அல்லது வேறு வகையால் தகுதியுடையவர்கள், ஆனல் அவர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்குத் தகுதியுடையவர்களென்று பதிவு உத்தியோகத்தருக்குத் தோன்றுகின்றவர்களின் பெயர்களடங்கிய "பீ" என்னும் நாமாவலியும்;

பூர்த்தி செய்யப்பட்டனவென்றும் மேலே குறித்த தேர்தற் தொகுதி சம்பந்தமாக நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்பும் அத்தகைய நாமாவலிகளும் அல்லது அதன் பிரிவுகளும் கீழ்க்காணும் விபரப்படி, கந்தோர் நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளனவென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :—

| பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம் | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பு, நாமாவலிகள் அல்லது அதன் பிரிவுகள் |
|---|---|
| (1) கச்சேரி .. | ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்குரிய, நடை முறையிலுள்ள, சம்பூரணமான வாக்காளர் இடாப்பும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும் ; |
| (2) ஒவ்வொரு பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் கந்தோர் | பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச்சீட்டிடும் பகுதிகளடங்கிய, நடைமுறையிலுள்ள, வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும் ; |
| (3) ஒவ்வொரு தல தாபன அதிகாரிகளின் கந்தோர் | தலதாபன அதிகாரிகளின் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச் சீட்டிடும் பகுதிகளடங்கிய, நடைமுறையிலுள்ள, வாக்காளர் இடாப்பின் பிரதியும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும் ; |
| (4) கிராமத் தலைமைக்காரரின் கந்தோர் | கிராமத் தலைமைக்காரரின் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதிச் சீட்டிடும் பகுதிகள் அடங்கிய வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும் அல்லது கிராமத் தலைமைக்காரனின் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதிச் சீட்டிடும் பகுதிகளிலுள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஆட்களின் பெயர்களும். |

2. குறிப்பிட்ட இராச சபைச் சட்டத்தின்படி மேற் கூறிய தேர்தற் தொகுதிக்குரிய வாக்காளர் இடாப்பில் தமது பெயர் இடப்படுதற்குத் தகுதியுடையவரும் தமது பெயர் அவ்விடாப்பிலும் " பீ " என்னும் நாமாவலியிலும் இடப்படாது விடப்பட்டவரும் அல்லது " ஏ " என்னும் நாமாவலியில் சேர்க்கப்பட்டவரும், காரியத்திற்கேற்ப, தமது பெயர் அவ்விடாப்பில் சேர்க்கப்படுவதற்கு அல்லது இருக்க விடுதற்கு உரிமை கோருப்வருமான ஒருவர், அல்லது அவருக்காக வேறொருவர், அது சம்பந்தமாக இராச சபைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் கொடுத்த " சீ " அல்லது " சீசீ " காரியத்திற்கேற்ப, மாதிரிப் பத்திரத்தில் எழுத்து மூலமாக வவுனியா கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வறிவித்தல் அரசாங்க " கெசற் " பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து நான்கு வாரங்களுக்குள் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் வவுனியா கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும்.

3. மேற் கூறிய தேர்தற் தொகுதிக்குரிய வாக்காளர் இடாப்பில் அல்லது " பீ " என்னும் நாமாவலியில் பெயர் காணப்படும் எவரேனும் ஒருவர் அவ்விடாப்பில் தமது பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது அவ்விடாப்பில் அல்லது " பீ " என்னும் நாமாவலியில் வேறு ஒருவரின் பெயர் காணப்படுவதை ஆட்சேபிக்கலாம், அல்லது அவ்விடாப்பில் உரிமை கோருபவரின் பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது இருக்க விடப்பட்டிருப்பதை இராச சபைச் சட்டத்தின் 1 ம் அட்டவணையில் கொடுத்த " டீ " அல்லது " ஈ " காரியத்திற்கேற்ப, என்னும் மாதிரிப் பத்திரத்தில் இரட்டைப் பிரதிகளில் வவுனியா கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படும் ஓர் பெயர் சம்பந்தமாக ஒவ்வொரு ஆட்சேபனையும் இவ்வறிவித்தல் அரசாங்க " கெசற் " பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து நான்கு வாரங்களுக்குள் வவுனியா கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும். எவரேனும் ஒரு உரிமை கோருபவருடைய பெயர் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படுதல் அல்லது இருக்க விடுதல் சம்பந்தமாக ஒவ்வொரு ஆட்சேபனையும் உரிமை கோருபவர்களின் பெயர்கள் அடங்கிய அறிவித்தல் பதிவு உத்தியோகத்தரின் கந்தோரில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதியில் இருந்து பத்து நாட்களுக்குள் பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும்.

4. ஏதேனும் ஒரு உரிமை கோருதற்கும், வாக்காளர் இடாப்பில் இன்னொருவருடைய பெயரைச் சேர்ப்பதற்கும் அல்லது இருக்க விடுதற்கும் ஒருவர் செய்யும் விண்ணப்பம், அல்லது ஆட்சேபனை செய்யும் காரியத்திற்குரிய மாதிரிப் பத்திரங்கள் வவுனியா நிர்வாக மாவட்டத்திலுள்ள பதிவு உத்தியோகத்தர் கந்தோரிலும், ஒவ்வொரு பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் கந்தோரிலும், ஒவ்வொரு தலதாபன அதிகாரிகளின் கந்தோர்களிலும், ஒவ்வொரு கிராமத்தலைமைக்காரரின் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். என். இராசா,
வவுனியா மாவட்ட உதவிப் பதிவு உத்தியோகத்தருக்காக.

கச்சேரி, வவுனியா,
1961 ம் ஆண்டு ஜனவரி மீ 20 ம் உ.

2–50/1

## இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டம், 1946

### 18 (2) ம் பிரிவின்படி அறிவித்தல்

### தேர்தல் தொகுதி இல. 85—மன்னார்

1956 ம் ஆண்டின் 16 ம் இலக்கம் கொண்ட இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராச சபைச் சட்டத்தின் 18 (2) ம் பிரிவின்படி—

(1) வாக்காளர் இடாப்பில், இறந்த அல்லது வாக்காளராகவிருக்கத் தகுதியற்றவர்களெனக் காணப்பட்ட, ஆட்களின் பெயர்கள் அடங்கிய “ ஏ ” என்னும் நாமாவலியும் ;

(2) இதுவரை தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் தமது பெயர் காணப்படாதவர்கள் அல்லது வேறுவகையில் தகுதியுடையவர்கள், ஆனால் அவர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்குத் தகுதியுடையவர்களென்று பதிவு உத்தியோகத்தருக்குத் தோற்றுகின்றவர்களின் பெயர்களடங்கிய “ பீ ” என்னும் நாமாவலியும்.

பூர்த்தி செய்யப்பட்டனவென்றும் மேலே குறித்த தேர்தல் தொகுதி சம்பந்தமான நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்பும் அத்தகைய நாமாவலிகளும் அல்லது அதன் பிரிவுகளும் கீழ்க்காணும் விபரப்படி, கந்தோர் நேரத்தில், பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளனவென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம் | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பு, நாமாவலிகள் அல்லது அதன் பிரிவுகள் |
|---|---|
| (1) கச்சேரி .. | ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்குரிய நடைமுறையிலுள்ள, சம்பூரணமான வாக்காளர் இடாப்பும் சம்பந்தப்பட்ட “ ஏ ”, “ பீ ” என்னும் நாமாவலிகளும். |
| (2) ஒவ்வொரு பெரும் பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோரும் | பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதிச்சீட்டிடும் பகுதிகளடங்கிய, நடைமுறையிலுள்ள, வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியும் சம்பந்தப்பட்ட “ ஏ ”, “ பீ ” என்னும் நாமாவலிகளும். |
| (3) ஒவ்வொரு உள்ளூர் தலதாபன அதிகாரியின் கந்தோரும் | உள்ளூர் தலதாபன அதிகாரியின் எல்லைக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதிச்சீட்டிடும் பகுதிகளடங்கிய, நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்பின் பிரதிகளும் சம்பந்தப்பட்ட “ ஏ ”, “ பீ ” என்னும் நாமாவலிகளும். |
| (4) கிராமத் தலைமைக்காரரின் கந்தோர் | கிராமத் தலைமைக்காரரின் எல்லைக்குள் இருக்கும் எல்லாச் சம்மதிச்சீட்டிடும் பகுதிகளடங்கிய வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியும் சம்மந்தப்பட்ட “ ஏ ”, “ பீ ” என்னும் நாமாவலிகளும் அல்லது கிராமத்தலைமைக்காரரின் எல்லைக் குள்ளிருக்கும் எல்லாச் சம்மதிச்சீட்டிடும் பகுதிகளிலுமுள்ள வாக்காளராகத் தகுதியுடையோரின் பெயர்களும். |

2. குறிப்பிட்ட இராச சபைச் சட்டத்தின்படி மேற்கூறிய தேர்தல் தொகுதிக்குரிய வாக்காளர் இடாப்பில் தமது பெயர் இடப்படுவதற்குத் தகுதியுடையவரும் தமது பெயர் அவ்விடாப்பிலும் “ பீ ” என்னும் நாமாவலியிலும் இடப்படாது விடப்பட்டவரும் அல்லது “ ஏ ” என்னும் நாமாவலியில் சேர்க்கப்பட்ட வரும், காரியத்திற்கேற்ப, தமது பெயர் அவ்விடாப்பில் சேர்க்கப்படுவதற்கு அல்லது இருக்க விடுவதற்கு உரிமை கோருபவருமான ஒருவர் அல்லது அவருக்காகவேறொருவர், அது சம்பந்தமாக இராச சபைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் கொடுத்த “ சீ ” அல்லது “சீசீ” மாதிரிப் பத்திரத்தில், காரியத்திற்கேற்ப, எழுத்துமூலமாகப் பதிவு உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவ்வறிவித்தல் அரசாங்க “ கெசெற் ” பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்கிடையில் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் பதிவு உத்தியோகத்தருக்கு (கச்சேரி, மன்னார்) கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

3. மேற்கூறிய தேர்தல் தொகுதிக்குரிய வாக்காளர் இடாப்பில் அல்லது “ பீ ” என்னும் நாமாவலியில் பெயர் காணப்படும் எவரேனும் ஒருவர் அவ்விடாப்பில் தமது பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது அவ்விடாப்பில் அல்லது “ பீ ” என்னும் நாமாவலியில் வேறொருவரின் பெயர் காணப்படுவதை ஆட்சேபிக்கலாம், அல்லது அவ்விடாப்பில் உரிமை கோருபவரின்பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது இருக்கவிடப்பட்டிருப்பதை இராச சபைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் கொடுத்த “ டீ ” அல்லது “ ஈ ” மாதிரிப்பத்திரத்தில், காரியத்திற்கேற்ப இரட்டைப் பிரதிகளில் எழுத்துமூலமாக பதிவு உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்கவேண்டும். வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படும் ஓர் பெயர் சம்பந்தமான ஒவ்வொரு ஆட்சேபனையும் இவ்வறிவித்தல் அரசாங்க “ கெசெற் ” பத்திரிகையில் பிரசுரமான திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் பதிவு உத்தியோகத்தருக்கு (கச்சேரி, மன்னார்) கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. ஏதேனுமொரு உரிமை கோருதற்கும், வாக்காளர் இடாப்பில் இன்னொருவருடைய பெயரைச் சேர்க்கப்படுதற்கும் அல்லது இருக்கவிடுதற்கும் ஒருவர் செய்யும் விண்ணப்பம், அல்லது ஆட்சேபனை செய்யும் காரியத்திற்குரிய மாதிரிப் பத்திரங்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள பதிவு உத்தியோகத்தர் கந்தோரிலும் (கச்சேரி, மன்னார்) ஒவ்வொரு பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் கந்தோரிலும், ஒவ்வொரு உள்ளூர் தலதாபன அதிகாரிகளின் கந்தோரிலும், ஒவ்வொரு கிராமத் தலைமைக்காரரின் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி, மன்னார்,
1961 ம் ஆண்டு ஜனவரி மீ 23 ந உ.

நீ. ப. ஜெகநாதன்,
பதிவு உத்தியோகத்தர்,
தேர்தல் தொகுதி இல. 85—மன்னார்.

2-50/2.

---

## இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டம், 1946

### 18 (2) ம் பிரிவின்படி அறிவித்தல்

### தேர்தற் தொகுதி இல. 87—திருகோணமலை
### தேர்தற் தொகுதி இல. 88—மூதூர்.

1956 ம் ஆண்டின் 16 ம் இலக்க இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டத்தின் 18 (2) ம் பிரிவின்படி—

(1) வாக்காளர் இடாப்பில், இறந்த அல்லது வாக்காளராகவிருக்கத் தகுதியற்றவர்களெனக் காணப்பட்ட, ஆட்களின் பெயர்கள் அடங்கிய “ ஏ ” என்னும் நாமாவலியும்,

(2) இதுவரை தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் தமது பெயர் காணப்படாதவர்கள், அல்லது வேறுவகையில் தகுதியுடையவர்கள், ஆனால் அவர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்குத் தகுதியுடையவர்களென்று பதிவு உத்தியோகத்தருக்குத் தோன்றுகின்றவர்களின் பெயர்களடங்கிய “ பீ ” என்னும் நாமவலியும், பூர்த்தி செய்யப்பட்டனவென்றும் மேலே குறித்த ஒவ்வொரு

தேர்தற் தொகுதிகள் சம்பந்தமான நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்புக்களும் அத்தகைய நாமாவலிகளும் அல்லது அதன் பிரிவுகளும் கீழ்க்காணும் விபரப்படி, கந்தோர் நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளனவென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது:—

| பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம் | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பு, நாமாவலிகள் அல்லது அதன் பிரிவுகள் |
|---|---|
| (1) கச்சேரி .. | ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்குரிய நடை முறையிலுள்ள, சம்பூரணமான வாக்காளர் இடாப்பும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும். |
| (2) ஒவ்வொரு பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் கந்தோரும் | பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் எல்லேக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச் சீட்டிடும் பகுதிகளடங்கிய, நடைமுறையிலுள்ள, வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியின் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும்; |
| (3) ஒவ்வொரு தலதாபன அதிகாரிகளின் கந்தோரும் | தலதாபன அதிகாரிகளின் எல்லேக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச்சீட்டிடும் பகுதிகளடங்கிய நடை முறையிலுள்ள, வாக்காளர் இடாப்பின் பிரதியும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும். |
| (4) கிராமத் தலைமைக்காரரின் கந்தோர் .. | கிராமத் தலைமைக்காரரின் எல்லேக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச் சீட்டிடும் பகுதிகள் அடங்கிய வாக்காளர் இடாப்பின் ஓர் பகுதியும் சம்பந்தப்பட்ட " ஏ ", " பீ " என்னும் நாமாவலிகளும் அல்லது கிராமத் தலைமைக்காரரின் எல்லேக்குள்ளிருக்கும் எல்லாச் சம்மதச் சீட்டிடும் பகுதிகளிலுள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஆட்களின் பெயர்களும். |

2. குறிப்பிட்ட இராசபைச் சட்டத்தின்படி மேற்கூறிய தேர்தற் தொகுதிகளுக்குரிய வாக்காளர் இடாப்புகள் எதிலும் தமது பெயர் இடப் படுதற்குத் தகுதியுடையவரும் தமது பெயர் அவ்விடாப்பிலும் " பீ " என்னும் நாமாவலியிலும் இடப்படாது விடப்பட்டவரும் அல்லது " ஏ " என்னும் நாமாவலியிலும் சேர்க்கப்பட்டவரும் காரியத்திற்கேற்ப, தமது பெயர் அவ்விடாப்பில் சேர்க்கப்படுதற்கு அல்லது இருக்கவிடுதற்கு உரிமை கோருபவருமான ஒருவர் அல்லது அவருக்காக வேறொருவர், அது சம்பந்தமாக இராசபைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் கொடுத்த " சீ " அல்லது "சீசீ " காரியத்திற்கேற்ப, மாதிரிப்பத்திரத்தின் எழுத்து மூலமாக திருகோணமலேக் கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு விண்ணப் பிக்க வேண்டும். இவ்வறிவித்தல் அரசாங்க " கெசற் " பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் திருகோணமலேக் கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும்.

3. மேற்கூறிய ஏதேனும் ஒரு தேர்தற் தொகுதிகளுக்குரிய வாக்காளர் இடாப்புகளில் அல்லது " பீ " என்னும் நாமாவலியில் பெயர் காணப்படும் எவரேனும் ஒருவர் அவ்விடாப்பில் தமது பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது அவ்விடாப்பில் அல்லது " பீ " என்னும் நாமாவலியில் வேறொருவரின் பெயர் காணப்படுவதை ஆட்சேபிக்கலாம், அல்லது அவ்விடாப்பில் உரிமை கோருபவரின் பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை அல்லது இருக்கவிடப்பட்டிருப்பதை இராசபைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் கொடுத்த " டீ " அல்லது " ஈ " காரியத்திற்கேற்ப, என்னும் மாதிரிப்பத்திரத்தில் இரட்டைப்பிரதிகளில் திருகோணமலேக் கச்சேரி,ப திவு உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவேண்டும். வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படும் ஓர் பெயர் சம்பந்தமான ஒவ்வொரு ஆட்சேபனையும் இவ்வறிவித்தல் அரசாங்க " கெசற் " பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் திருகோணமலேக் கச்சேரி, பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும். எவரேனும்மொரு உரிமை கோருபவருடைய பெயர் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படுதல் அல்லது இருக்க விடுதல் சம்பந்தமான ஒவ்வொரு ஆட்சேபனையும் உரிமை கோருபவர்களின் பெயர்கள் அடங்கிய அறிவித்தல் பதிவு உத்தியோகத்தரின் கந்தோரில் பரிசீலனைக்கு வைக்கப்பட்ட திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பதிவு உத்தியோகத்தருக்கு வந்து சேரவேண்டும்.

4. ஏதேனுமொரு உரிமை கோருதற்கும், வாக்காளர் இடாப்பில் இன்னொருவருடைய பெயரைச் சேர்க்கப்படுதற்கும் அல்லது இருக்க விடுதற்கும் ஒருவர் செய்யும் விண்ணப்பம், அல்லது ஆட்சேபனை செய்யும் காரியத்திற்குரிய மாதிரிப்பத்திரங்கள் திருகோணமலே நிர்வாக மாவட்டத்தி லுள்ள, பதிவு உத்தியோகத்தர் கந்தோரிலும், ஒவ்வொரு பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தர் கந்தோரிலும், ஒவ்வொரு தலதாபன அதிகாரிகளின் கந்தோரிலும், ஒவ்வொரு கிராமத் தலைமைக்காரரின் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

திருகோணமலேக் கச்சேரி,
1961 ம் ஆண்டு தை மீ 23 ந் உ.

டி. எம். ஏ. ஸ்பெல்வின்ட்,
தேர்தற் தொகுதிக்குரிய பதிவு உத்தியோகத்தர்,
இல. 87—திருகோணமலே,
இல. 88—மூதூர்.

2–50/3

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது